# மே மாதம் - 2016

# ஆயர்மடல்

உயிர்த்தெழுந்து இன்றும் நம்மிடையே தூய ஆவியாராக இருக்கும் இயேசுவின் திருப்பெயரால் உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துதல்களையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது திருச்சபையின் பல்வேறு எதிர்கால நலத்திட்டங்களை நினைத்து திருச்சபையின் வளர்ச்சியிலும் இறைமக்களின் ஆவிக்குரிய மறுமலர்ச்சியிலும் பூரணமாக வளர நம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர் நம்மில் செயல்பட ஆசீர்வாதத்தோடு நம்மை ஒப்புவிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஐக்கிய குழுக்களும் மற்ற சங்கங்களும் திருச்சபையினுடைய ஆவிக்குரிய அமைப்பு வளர்ச்சிக்கும் அமைப்பின் எதிர்கால திட்டங்களுக்கும் நீங்கள் உதாரத்துவத்தோடு ஈடுபடுவது மட்டுமல்ல, உங்கள் அனுதின ஜெபங்களில் தனித்தனியாக, குடும்பம் குடும்பமாக ஈடுபடுவது இன்றியமையாதது என்பதை ஆழ்ந்த அனுபவத்தோடு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். நமது திருச்சபையின் சேகர குழுவாக, திருச்சபையின் அமைப்புக்கும் எதிர்காலத்தின் முன்னேற்றத்திற்கும் ஆர்வத்தோடு சிந்தித்து தங்களை ஆதாரப்பூர்வமான செயல்களில் ஈடுபட பரிந்துரை செய்யப்படுகிறது. வளர்ச்சிக்கு ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பமும், ஆத்துமாவும் ஜெப வாஞ்சையுடன் திருச்சபையின் மொத்த வளர்ச்சியில் ஆர்வத்தோடு ஈடுபட உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கடந்த மாதம் நடைபெற்ற நமது திருச்சபையின் ஊழியங்களில் திரளாய் பங்கு பெற்றதற்காக என்னுடைய நன்றி களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதம் முழுவதும் நடைபெறும் ஊழியங்களில் அனைவரையும் ஈடுபடுத்தி கொள்ள அழைக்கப்படுகிறீர்கள்.

அருட்பணியில் உங்கள் ஆயர்

**Rev.Daniel Chelladurai**



# மே மாத ஆராதனை ஒழுங்குகள்

| நாள் | நேரம் | தலைப்பு | வேதபாடங்கள் | செய்தியளிப்பவர் |
|---|---|---|---|---|
| 01.05.2016 | காலை 8.30 மணி | திருவிருந்து ஆராதனை கிறிஸ்துவின் சிந்தையில் திருப்பணி | II ஆரசர் 2: 1 - 14<br>மத்தேயு 28: 16 - 20 | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 08.05.2016 | காலை 8.30 மணி | தூய ஆவியாரால் வழி நடத்துதல் | வி.பயணம் 36: 24 - 36<br>யோவான் 14: 25 - 31 | ஆயர் |
| 15.05.2016 | காலை 8.30 மணி | பெந்தேகோஸ்தே திருநாள் வாரும் தூய ஆவியாரே எம்மை விடுவியும் | ஏசாயா 6 : 1 -11<br>லூக்க 4 : 16 -21 | திரு.ஜோசப் |
| 22.05.2016 | காலை 8.30 மணி | திரித்துவ ஞாயிறு | ஆதி 18 : 1- 15<br>மாற்கு 1 : 1-11 | ஆயர் |
| 29.05.2016 | காலை 8.30 மணி | வழிபாட்டில் கடவுளின் வெளிப்பாடு | 1 அரசர்கள் 6: 22 -30<br>மாற்கு 3 : 1 - 6 | திரு.பால் பன்னீர் செல்வம் |

# <u>கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு</u>

## <u>பாமாலை - 302</u>

## என்தன் ஜீவன் இயேசுவே

## (Take my life and let it be)

"சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவ
னுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும்
என்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை
வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க
புத்தியுள்ள ஆராதனை." ரோமர் 12.1

நாம் பிரியமாக வைத்திருக்கும் ஒரு பொருளை எப்போதாவது இன்னொருவருக்கு மனதார விட்டுக்கொடுத்திருக்கிறோமா? ஒரு வேளை இளவயதாயிருக்கையில் பெற்றோருடைய வற்புறுத்தலினால் ஒரு விளையாட்டுக் கருவியைத் தம்பி. தங்கைக்கு விட்டுக் கொடுத்திருக்கலாம் அல்லது மாணவனாயிருக்கும்போது, ஆசிரியரின் வற்புறுத்தலினால் இப்படிச் செய்திருக்கலாம். பெரியவர்களானபின் நமது ஆஸ்தியில் ஒரு பகுதியையோ நமது தாலந்துகளையோ ஆண்டவருக்கு கொடுத்திருக்கலாம். ஆனால் மேற்காட்டிய வசனத்தின்மூலம், ஆண்டவர் நமது ஆஸ்தியையோ, நமது தாலந்துகளையோ விரும்புவதைவிட, நம்மையே அவருக்கு அர்ப்பணம் செய்வதையே விரும்புகிறார் என அறிகிறோம்.

இந்தப் பாடலை எழுதிய பிரான்ஸஸ் ரிட்லே ஹாவர்கல் அம்மையார் ஆத்துமாக்களின் பேரில் மிகுந்த வாஞ்சையுள்ளவர்கள் ஒரு முறை ஒரு நண்பர் வீட்டுக்குச் சென்று ஐந்து நாட்கள் அங்கு தங்கியிருக்க நேர்ந்தது. அவ்வீட்டில் பத்து பேர் உண்டு. அவர்களில் சிலர் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாதவர்கள். இதையறிந்த ஹாவர்கல் அம்மையார், இரவு முழுவதும் முழங்காலில் நின்று. ஆண்டவரே இங்குள்ள எல்லோரையும் எனக்குத் தந்தருளும் என மிகவும் ஊக்கமாக ஜெபித்தனர். அந்த உருக்கமான விண்ணப்பத்தை நமதாண்டவர் கேட்டருளினதால், அம்மையார் அங்கிருந்து செல்லுமுன், அங்குள்ள பத்துப்பேரும் கிறிஸ்துவுக்குத் தங்களை ஒப்புக் கொடுத்தனர் அவர்கள் அங்கிருந்த கடைசி இரவில் தூங்காமல் கிறிஸ்துவுக்கு நம்மைத் தத்தம்



செய்தலைக் குறித்து சிந்திந்துக்கொண்டிருக்கையில் "என்தன் ஜீவன் இயேசுவே" என்ற பாடல் அவர்கள் மனதில் உருவாகிற்று அன்றிரவே அதை எழுதி என்னையே சமூலமாய் தத்தம் செய்தேன் நித்தமாய் "Patmos" என்னும் இராகத்தில் (Church Hymnary-512) பாடவேண்டும் என அவர்கள் விரும்பினார்கள். ஆனால் இப்போது நாம் அதை வேறு பல இராகங்களில் பாடி வருகிறோம்.

இதை நாம் பாடும்போது "என்தன் ஜீவன் (வாழ்க்கை) இயேசுவே, சொந்தமாக ஆளுமேன்" என்னும் வரிகளை வேகமாக, யோசனையின்றிப் பாடி விடுகிறோம். இந்த வரிகள் நமது சொந்த அனுபவமான பின்னரே, பின் கவிகளில் குறிப்பிடும் நமது காலம் நேரம், கை, கால், நாவு, ஆஸ்தி, புத்தி, கல்வி முதலியவற்றை ஆண்டவருக்குத் தத்தம் செய்யக் கூடும்.

பிரான்ஸஸ் ரிட்லே ஹாவர்கல் அம்மையார் 1836-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஆஸ்ட்லே என்னும் நகரில் பிறந்தார்கள். ஒரு பக்தியுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது தந்தை ஆங்கிலத் திருச்சபையைச் சேர்ந்த ஒரு போதகர் அம்மையார் நான்கு வயதாயிருக்கும்போதே வேத புத்தகத்தை நன்றாக வாசிப்பார். பின்னர் புதிய ஏற்பாடு முழுவதையும், பழைய ஏற்பாட்டின் சில பகுதிகளையும் மனப்பாடம் பண்ணியிருந்தார். இங்கிலாந்திலும், ஜெர்மனி நாட்டிலும் கல்வி பயின்று ஆங்கிலத்தைத் தவிர ஐந்து பிறமொழிகள் கற்றனர். சங்கீதத்தில் அதிகத் திறமை பெற்று, இனிமையாகப் பாடவும், இராகங்கள் எழுதவும், பியானோ முதலிய சங்கீதக் கருவிகள் வாசிக்கவும் கற்றுக் கொண்டார். மேலும் ஓய்வுநட் பள்ளியில் போதிப் பதிலும், வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வேதத்தை வாசித்துக் கொடுப்பதிலும், ஏழை மக்களின் தேவைகளைக் கவனிப்பதிலும் அதிகச் சிரத்தை காட்டினர். ஹாவர்கல் எழுதிய இதர பாடல்களில் சில அருள் நாதா நம்பி வந்தேன் (பாமாலை 239) தெய்வ சமாதான இன்ப நதியே - (பாமாலை 357) நாதா உம் வார்த்தை கூறவே - (பாமாலை 201) என்பவை.

அவர்கள் 1879 -ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3-ஆம் தேதி உவேல்ஸ் நாட்டில் சுவான்ஸீ என்னுமிடத்தில். தமது 42-ஆம் வயதில் காலமனார்கள்.

**- Nishada's**


ஆதாரம்:

1.கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு - **Mr.D.EBENKAN**

2.www.christianity.com

3. Havergal Frances Ridley" The Oxford Dictionary of the Christian Church, edited by F.L. Cross and E.A Livingstone, Oxford,1997.

4. Wells, Amos R.A. Treasure of hymns: Brief biographies of 120 leading hymn - writers and Their best hymns. Boston: W.A. Wide company, 1945

5. Various internet articles

## Birthdays in The Month of May

May 1 Miss. F. Adeline Dorcas
Mr. Paul Pari
May 3 Mrs. Esther Cinthiya
May 4 Mr.S. Edwin
May 5 Mrs. S. Esther
Mrs. Chandra Wesly
Mr. Elson Samuel
May 6 Mrs. Joyce Metilda
Mrs. Jeeva Joseph
Mr. C. Ravi Joshua Daniel
May 7 Miss. R. Bennitta
May 8 Mr. Hilton Roland Albert
Mr. M.Gladwin Prabakaran
Mrs. R.Epsiba
Mr. D.Wesly
May 9 Mrs.Saroja Manuel
May 10 Mr. S. Dhanapalan
Mr.N.Ponnaiyan
Mrs. Deva Rajamani. H
May 12 Mr. A. Alex Henry
Mr.S.Isaac Bernie
Mrs. T. Annamani Grace
Mr. T.Wilson
May 13 Mr. R. Kaviarasu
May 15 Mrs. C. Annie Patricia
Mrs. A. Kavitha Priscilla
Mrs. S. Kalyani
May 16 Mr. D. Markas Joseph Paul
May 17 Mrs. Priyadarshini Rajah
May 18 Master. Stephen Jayakumar
May 20 Miss. May Pauline
May 21 Master. Ashwin Meshak
May 22 Mr. M.P. Abishek
Miss. Aaliyah Seth
Mrs. D.Leela Bai
Mrs.S. Cicy
Mrs. G.Johan Prasanna
May 23 Mr.S.Arul Samuel
May 24 Mr. Samlyn
May 25 Mr. C.Sagadevan
Mrs. Lorna Sunder
Mrs. Vasantha Kumari
May 27 Mr. J.Reuben Edward
Mrs. Flora Manuel
May 28 Mrs. P. Salomi Kiruba Gladis
May 29 Mrs. A. Jayaseeli Arputharaj
Mrs. Swan Ponmalar
Mr. A.Joseph
Mr.T.N. Bibin
May 30 Mrs. T.Lily
Mrs. V.Merline
May 31 Devaroslin
Mr. A. Mackley Stanley



**பிறந்த நாள் மற்றும் திருமண நாள் கொண்டாடும்
அனைவருக்கும் திருச்சபையின் சார்பில்
வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!**



## WEDDING DAYS IN MAY

May 4 Mr.D. Wesley & Mrs. Chandra Wesley
May 5 Mr. T.N.Brejin & Mrs. K.Rupa Mary
May 6 Mrs. P.David & Mrs. D. Gunaseeli
May 7 Mr. Joseph Samraj & Mrs. Esther Cynthia
Mr. Ramesh Andrews & Mrs. Susila
Mrs. J. Moses Vivekanandan & Mrs. Sugirtam
May 8 Mr. Edwin Williams & Mrs. Mercy Edwin
Mr.M. Gladwin Prabakaran & Mrs. P.Rebecca Agnes Ida Scader
Mr.R. Jesudas & Mrs. Deva Roslin
Mr.RajaSingh & Mrs. Sujatha
May 9 Mr.Dinesh John Dawson & Mrs. P. Katherine Kalpana
May 10 Mr. H.Deva Rajamani & Mrs. R.Glory Stella Bai
May 11 Mr.. V.R. Jayafred Raja & Mrs. V. Shirley
May 12 Mr. N. Selvamani & Mrs. Vasantha Kumari
Mr. A. Jeyaseelan & Mrs.Vijila GnanaRose Suba
Mr. V. Justin Thanga Prakash & Mrs. K.S. mary Jeni Suji
May 15 Mr. Amarnath & Mrs. Stella Deborah
Mr. C.David Dennison & Mrs. J. Glory Vitta Bai
Mr.I.Charles Samuel & Mrs.S. Emeema Jeba Malar
May 18 Mr. Charles Moses & Mrs. Lancey Charles
Mr. P.Sargunam & Mrs. S.Chandra
May 19 Mr. S.Alex Henry & Mrs. Geetha Henry
Mr. A. Makley Stanley & Mrs. Swan Ponmalar
May 20 Mr. Isaac Bernie & Mrs. Flora Nirmala
Mr. S. Arul Samuel & Mrs. A.Mary
May 21 Mr. Jacob Theodore & Mrs. Emily Shanthi
Mr. S. Sundar & Mrs. S. Annakalangiam
May 23 Mr. S. Benkins Dinesh & Mrs. Cynthia Dinesh
Mr. R. Kinson Raja & Mrs. Nirubha
Mr. Samlyn & Mrs. Vinosha Sweety
May 24 Mr. S. Prince & Mrs. Sarojini Prince
May 26 Mr. A. Raj Prashanth & Mrs. Percy Gnana Rupa
Mr. S. Manuel Raj Stephen & Mrs. Jayarani Bobby
May 27 Mr. D.Hubert & Mrs. C. Jean Premila
May 28 Mr. C.Ganesh & Mrs. C. Selva Rajam
Mr. Jimreeves Samuel & Mrs. Shiny
May 29 Mr. Melki David & Dr. W. Hannah Melki
Mr. K. Dharmaraja & Mrs. Jubilee Jana

# வேத வினா - விடை போட்டி

## மே மாத கேள்விகள்

## அப்போஸ்தலர் நடபடிகள் ( வசன ஆதாரம் தரவும் )

1. உயிர்தெழுந்தபின் இயேசு சீஷர்களுக்கு எத்தனை நாட்கள் காணப்பட்டார்?
2. பெந்தேகோஸ்தே தினம் எப்பொழுது வந்தது?
3. ஆதிக்கிறிஸ்தவர்களின் தினசரி வாழ்க்கை எப்படி இருந்தது?
4. ஜனங்கள் பேதுரு கொடுத்த செய்தியைக் கேட்டபின் எப்படி மாறினார்கள்?
5. பேதுருவையும் யோவானையும் நியாயம் விசாரிக்க கூடினவர்கள் யார்? யார்?
6. சப்பானி அவர்களை நோக்கி பார்த்த போது பேதுரு என்ன சொன்னார்?
7. எருசலேம் தேவலாயத்தின் ஜெபநேரம் என்ன?
8. கமாலியேல் என்பது யார்?
9. ஆபிரகாம் எந்த நாட்டை எந்த மனித இனத்தை சேர்ந்தவர் ஆவார்?
10. 2+200+70+200 (புதிய ஏற்பாடு)

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 20-05-2016**

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி

**C.S.I. இயேசுவில் புதுவாழ்வு ஆலயம்**
எண் 55, 3வது மனை பிரிவு,
ஆசிரியர் குடியிருப்பு,
லட்சுமிபுரம், சென்னை – 600 099.

குறிப்பு: தெளிவான முகவரியுடன்
சந்தா எண்ணையும் சேர்த்து எழுதி அனுப்பவும்

csinewlifeinjesus@gmail.com 9444 633129

**www.csinewlifeinjesus.org**

## பாராட்டுகிறோம்!

திரு.சாம்சன் தானியல் திருமதி. வில்சி ஜெசெந்தா மகள்
**ஜூடித் நுரிட்டா** ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது
அவரை திருச்சபையராக வாழ்த்துகிறோம்.



# சென்ற மாத போட்டியின் விடைகள்

1. யோவான் 4:42
2. யோவான் 6:8
3. யோவான் 11:42
4. யோவான் 12: 26
5. தோமா யோவான் 11:16
6. நிக்கொதேமு, யோசேப்பு, யோவான் 3:1,2, 19:38
7. யோவான் 3:3
8. யோவான் 19: 25
9. யோவான் 7 : 38
10. I நாளா 29 : 7

## சரியான விடை எழுதியவர்கள்

1. திருமதி. எஸ்தர் சந்தோஷ்ராஜ்
2. திருமதி. கீதா ஹென்றி
3. திருமதி. ஜாய்ஸ் விமலா
4. திருமதி. கலா சுந்தரகுமார்
5. திருமதி. ஸ்விட்டிலீன் ரிச்சர்ட்
6. திருமதி. ஸ்டெல்லா ராஜ்
7. திருமதி. தேவ ரோஸ்லின்
8. திருமதி. லீலா டிக்சன்
9. திருமதி. மெரில் ஜஸ்டின்
10. திருமதி. ஸ்விட்டிலின் ரிச்சர்ட் (மார்ச்)

### படித்ததில் பிடித்தது

உறவில் உரிமையை கொடுங்கள்
வாழ்க்கையில் நம்பிக்கையை கொடுங்கள்
அன்பில் உண்மையை கொடுங்கள்.
நட்பில் நேர்மையை கொடுங்கள்
சந்தோஷம் தானாக அமையும்..........!

**- A.Joseph**

**விடுமுறை வேதாகமப்பள்ளியில் கலந்துக்கொண்ட அனைத்து பிள்ளைகளுக்கும் சிறப்பாக நடத்தின, இயக்குனர், ஆசிரியர்கள், தன்னார்வ தொண்டர்கள் நன்கொடை உணவு கொடுத்து உதவின அனைத்து திருச்சபை அன்பர்களுக்கும் பாராட்டு தலை தெரிவித்துக் கொள்கிறோம்.**

# Warrior Horses - யுத்தகுதிரைகள்

குதிரை யுத்த நாளுக்காக ஆயத்தமாக்கப்படும்
ஜெயமோ கர்த்தரால் வரும் – நீதி : 21:31

யுத்தத்திற்கென்று பயன்படுத்தப்படும் குதிரைகள் விஷேஷித்த குணம் வாய்ந்தவை. இதற்காக பிரித்தெடுப்பார்கள், பயிற்சியளிப்பார்கள் பக்குவப்படுத்துவார்கள்.

**1. பிரித்தெடுத்தல்:** இளமையானதாக பெலமுள்ளதாக எலும்புகள் உறுதியானவையாக, நீண்ட கால்கள் உடையவைகளாக உரிய நிறமுடையதாக ( கறுப்பு, சாம்பல் , காப்பிநிறம்) இருக்கின்ற தகுதியுடைய குதிரைகளைத்தான் யுத்தப்பயிற்ச்சியளிக்க பிரித்தெடுப்பார்கள்.

பிரித்தெடுத்து என்ன செய்வார்கள்?

முதலில் கடிவாளம் போடுவார்கள் ஏன்? குதிரையால் 360 டிகிரி கோணத்தை கூட தெளிவாக பார்க்க முடியும்.

பிரியமானவர்களே! நாமும் கூட இறைவனுக்காக பிரித்தெடுக்கப் பட்டவர்கள். உலக ஆசா பாசங்களுக்கு கடிவாளம் போட வேண்டும். அப்பொழுது எந்த கவனச்சதிறல்களும் ஏற்படாது. யுத்தத்தில் நாம் வெற்றிபெற வேண்டுமானால் நமது பழைய தோல்விகள் T.V.Phone Messages, Face book, Whats app போன்ற பொழுது போக்குகளுக்கு நிச்சயம் கடிவாளம் போட வேண்டும். இல்லை என்றால் இவைகள் நம்மை முன்னேற விடாமல் கீழே தள்ளி விடும். நேரத்தை வீணாக்கி உழைப்பதற்கான நேரத்தை தள்ளிவிடும்.

**2. பயிற்சி அளித்தல்: (a) Mental Preparation உள்ளத்திற்கு பயிற்சி :** பிரித்தெடுத்த குதிரைகளை யுத்தகளத்திற்கு அழைத்துப் போவார்கள். இரத்தவாசனையை நுகரச் செய்வார்கள். யுத்தத்திற்கு பயன்படுத்தப்படும் ஆயுதங்களின் சத்தத்தைக் கேட்கச் செய்வார்கள் ஒரு செயற்கை யுத்தத்தை செய்து இக்குதிரையை நிற்க வைத்து சவாலை சமாளிக்க அதற்கு மனதைரியத்தைக் கொடுப்பார்கள்.



அன்பர்களே! நாமும் இயேவுக்காக யுத்தம் பண்ண நாம் மனதளவில் பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் எந்த ஒரு காரியத்திற்கும் பயிற்சி மிக அவசியம் Practice Makes a man Perfect

சாத்தானின் நயவஞ்சக வலைகள் எது என்பதை தெளிவாக பிரித்து அறிய தெரிந்து கொள்ள வேண்டும். பிரச்சனைகள் என்பது எல்லா வயதினருக்கும், எல்லா தரப்பினருக்கும் உண்டு. பயிற்சி எடுத்துக் கொள்ளாதவர்கள் பிரச்சனையில் அமிழ்ந்து விடுவார்கள். தகுந்த ஆலோசனை கேட்டு, ஜெபித்து வேத வசனங்கள மூலம் விடைதேடி வெற்றிபெற வேண்டும் இறைவனின் உதவியை தேடவேண்டும் இறைவனின் வழி நடத்துதல் நமக்கு நிச்சயம் உண்டு.

நீ தண்ணீர்களை கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன். நீ ஆறுகளை கடக்கும் போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை. நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய் . அக்கினி ஜுவாலை உன்மேல் பற்றாது
ஏசாயா: 43 : 2

உலகத்தில் உங்களுக்கு உபத்திரவங்கள் உண்டு என்று தேவன் கூறியிருக்கிறார். ஆனால் அவற்றிலிருந்து நமக்கு ஜெயம் கொடுப்பார் என் வாக்களித்திருக்கிறார்.

**(b) உடல் பயிற்சி : Physical Exercise:**

யுத்தத்தை மேற்கொள்ள உடலளவிலான பயிற்சி கண்டிப்பாக தேவை.

1. (உ.ம்) சுமையை ( குதிரை வீரன், ஆயுதங்கள் ) சுமந்து கொண்ட வேகமாக ஓடவேண்டும்.
2. தன்னையும் தற்காத்து தன் வீர நடையுடன் எதிர்கொள்ள வேண்டும்.
3. அளவான உணவு உண்ணவேண்டும்
4. எதிரியை வீழ்த்தி வெற்றி பெற வேண்டும்.
5. எப்பொழுது கவனமாக விழிப்புடன் இருக்கவேண்டும் கவனமாக இருக்க வேண்டும். இல்லையெனில் சாத்தான் நம்மை அவனுக்கு சொந்தமாக்கி எடுத்து விடுவான்.

நாமும் இக்குதிரையைப் போல் பல பயிற்சிகள் செய்ய வேண்டும்.
(எ.கா) அதிகாலை ஜெபம் இடைவிடாத ஜெபம், தனி ஜெபம்
விசுவாச அறிக்கை தேவனோடு அனுதின உறவு
தேவவார்த்தையில் பெலப்படுதல், மனபாடம் செய்தல் அவ்வார்த்தையில் நம்பிக்கை போன்ற பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**3. தேவனோடு சார்ந்திருத்தல் :** தாவீதைப் பற்றி நமக்குத் தெரியும், அவன் தேவனை மாத்திரம் உயர்த்திப்பார்த்தான், ஆனால் கோலியாத்தோ அவன் உருவத்தை, பலத்தை, சாதனைகளை, Back Groundஐ மற்றவர்களையே பெலனாகக் கொண்டிருந்தான். தாவீது தேவனில் வைத்திருந்த விசுவாச உறவின் மூலம் விருத்தசேதனமில்லாத புருஷன் எம்மாத்திரம் என்று தாவீதிடம் சவால் விட்டான், நாமும் கூட தாவீதைப் போல நாம் நமது பெலவீனத்தை உணர்ந்து அந்த பெலவீனத்தில் இறைஇயேசுவின் பெலன் நம்மை பெலப்படுத்தும் என அறிந்து விசுவாச அறிக்கை செய்யவேண்டும். எதிரியாகிய சாத்தானை வீழ்த்த வேண்டும். ஜெயத்தை கொடுப்பவர் தேவன் மாத்திரமே!.

**யுத்தவீரன்**

யுத்த குதிரைக்கு ஏறக்குறைய 16 வகையான கொடுதல் மூலம் தனது உத்தரவுகளை குதிரைக்கு தனது காலில் உள்ள தொடுதல் மூலம் (Signalஐ) வெளிப்படுத்துவான் (உ.ம்) கால்மூலம் குதிரையின் கழுத்தை வயிறை காலை, மார்பை வீரன் தொடுவான் ஏனெனில் அவ்வீரனின் கைகள் இரண்டும் எதிரியை வீழ்த்தி விட ஆயுதங்களால் நிரப்பப்பட்டிருக்கும். அந்த குதிரை அதை புரிந்து உணர்ந்து கொண்டால் தான் அவ்வீரனுக்கு வெற்றி கிடைக்கும் அதற்கு பயிற்சி வேண்டு (ஜெபம் வேதவாசிப்பு) அதேபோல நாமும் தேவானகிய ஏசுவின் சத்தத்திற்கு , தொடுவலுக்கு நாம் ஒத்து போக வேண்டும் விட்டுக்கொடுக்க வேண்டும். அப்போது நாமும் ஜெயத்தை சுதந்தரிக்க முடியும்.

தோல்வி என்பது தேவ திட்டத்தில் இல்லாத ஒன்று எனவே ஜெயத்தை கொடுக்கிற தேவனையே சார்ந்திருப்போம். நமது படிப்பில் நமது வாழ்வில் குடும்பத்தில் பிரச்சனையில், எதிர்காலத்தில் வேலையில் பணத்தேவையில் குழப்பத்தில் தடுமாற்றத்தில் வழி திறக்காத வேளைகளில் வெற்றியை சுதந்தரிப்போம். இயேசுவின் நாமத்தை உயர்த்துவோம்! ஆமென்.

இப்படிக்கு கிறிஸ்துவின் பணியில்

**G.G. ஜெபராணி**

தலைமை ஆசிரியை



# நினைக்கப்படுதல்

ஒரு பிரபல சினிமா நடிகர் ஒரு சிறந்த பாடகர், ஒரு பெரிய அரசியல்வாதி. ஒரு சாதனைமிக்க விளையாட்டு வீரர், ஒரு பெரிய செல்வந்தர் இவர்கள் அநேகரால் நினைக்கப்படுவார்கள். இவர்கள் அனேகரால் கவனிக்கப்படுவார்கள். ஆனால் இவர்களைக் குறித்த நினைவுகளால் ஒருவருக்கு என்ன கிடைக்கிறது? என்பதே முக்கியம். இவர்களைக் கவனிக்கும் போது எவற்றை காண முடிகிறது என்பதே முக்கியம். ஒருவருடைய பிரபலத்தின் விளைவாக அவர் பலரால் நினைக்கபடுவது அல்ல பெரிய விஷயம். அவ்விதம் நினைக்கப்படும் போது அந்த நினைவுகள் இன்னொருவருக்கு எப்படிப்பட்ட நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் என்பதே முக்கியம். ஒருவரை கவனிக்கப்படும்போது அவருடைய தோற்றமும் அவருடைய அந்தஸ்த்தும் அவரை மிகப்பெரிய ஒரு நபராக எண்ணத் தோன்றும். ஆனால் அவற்றால் எதனைக் கற்றுக்கொள்ள முடியும், எதனை ஆக்கபூர்வமாக பெற்றுக்கொள்ள முடியும் என்பதே முக்கியமானது.

ஒருவரை குறித்த நினைவுகள் இன்னொரு இருதயத்திற்கு நல்லதோர் வாழ்க்கைக்கான தூண்டுகோலாகவும் நல்லதோர் செயல்பாட்டிற்கான உந்து விசையுமாய் இருக்க வேண்டும். தீமோத்தேயுவை நினைத்த போது பவுலின் நினைவுக்கு வந்தது வெறும் தோற்றமோ, திறமையான செயல்பாடுகளோ அல்ல. அவனுடைய மாயமற்ற விசுவாசம்தான் நினைவிற்கு வந்தது. பிலிப்பியருக்கு எழுதும் போது அவனுடைய உத்தமக் குணத்தைத்தான் அவர்களுக்கு அப்போஸ்தலன் நினைவூட்டினான்.

இந்நாட்களில் பிரபலமாயிருக்கும் சில கிறிஸ்தவ பாஸ்டர்களையோ, நற்செய்தியாளர்களையோ நினைக்க நேர்ந்தால் நலமான தொன்றையும் நினைக்க வாய்ப்புக்கிடைத்ததில்லை அவர்களின் பந்தா தோற்றம், மாயமாலப் பேச்சுகள், தந்திரமான செயல்பாடுகள், திறமைகள் ஆகியவைத்தான் நினைவிற்கு வரும் அவர்களிடம் இயேசு கூறியதுபோல என்னை கண்டவன் பிதாவை கண்டான் என்று கூறதக்கதாக இராது.

ஒரு மனிதன் பலர் நினைக்கதக்க விதமாக தன்னைப் பிரபலமாக்கிக் கொள்ள இயலும். ஆனால், நல்ல குணங்கள், நல்ல பண்புகள், நல்ல முன்மாதிரி நடைத்தைகள், நல்ல விசுவாச நிலைபாடுகள், நல்ல குறிக்கோள், நல்ல அன்பு, தாழ்மை ஆகியவற்றிக்காக நினைக்கப்பட வாய்ப்பில்லையேல் அவரை குறித்த நினைவு பயனற்றது. அவரால் யாருக்கும் உண்மையான பலன்கள் இல்லை. ஆழகான தோற்றங்களைக் குறித்த நினைவு ஒருவரை விசேஷமாக எண்ண வைக்கும் ஆனால் அழகான ஒரு வாழ்க்கை முறையைக் குறித்த நினைவுகள் அவ்விதமானதோர் அழகான வாழ்க்கையைப் பலர் பின் பற்றத் தூண்டுகோல்களாகும். ஆம், நாம் பிரிந்து சென்ற பிறகும் நம்மைக் குறித்த நல்ல நினைவுகள், பிறரிடம் தங்கி அவர்களுக்குப் பிரயோஜனப்பட வேண்டும்.

**இன்னொருவரை மாதிரியாகக் கொள்வதை விட**

**இன்னொருவருக்கு மாதிரியாயிருக்க முயற்சி செய்**